**செ. கு. எண்: 078** **நாள்: 07.08.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 7.8.2019**

---

மத்திய வெளியுறவுத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அமைச்சராகவும், பாரதீய ஜனதா கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராகவும், மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவராகவும், அரசியல் உலகில் அதிகம் மதிக்கப்பட்ட பெண் தலைவர்களில் ஒருவராகவும் விளங்கிய திருமதி சுஷ்மா சுவராஜ் அவர்கள் நேற்று (6.8.2019) மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் அதிர்ச்சியும், மிகுந்த வருத்தமும் அடைந்தேன்.

உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராகவும், சிறந்த பேச்சாளராகவும் இருந்த திருமதி சுஷ்மா சுவராஜ் அவர்கள், பின்னர் தீவிர அரசியலில் ஈடுபட்டு, தன்னுடைய இளம் வயதிலேயே ஹரியானா மாநிலத்தின் அமைச்சராகவும், பல முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். டெல்லியின் முதலமைச்சர் பதவியை வகித்த பெருமைக்குரியவர்.

இந்தியத் திருநாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில், வெளிநாடுகளில் பிரச்சனைகளில்

சிக்கிய இந்தியர்களுக்கு தேவையான உதவிகளை உடனுக்குடன் செய்து, இந்தியர்களின் பேரன்பைப் பெற்றவர். மேலும், சமூக வலைதளங்களில் இந்தியர்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு உடனுக்குடன் பதிலளித்து, இளைய தலைமுறையினரின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கட்சிபேதமின்றி அனைத்து தலைவர்களிடமும் நல்லிணக்கத்தோடு பழகிய பண்பாளர். பெண்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்த திருமதி சுஷ்மா சுவராஜ் அவர்களின் மறைவு, அவர்தம் குடும்பத்தினருக்கு மட்டுமல்லாமல், இந்திய நாட்டுக்கே பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**